Registered as Newspaper

# சுடர் ஒளி

THE SUDAR OLI

සුඩර් ඔළි

26.10.2020 திங்கட்கிழமை

## புதினம் தெரியுமோ?

கோத்தாபய ஆட்சியில கொலைகாரர் எல்லாரும் வெளில வரத்தான் போகினம் எண்டது சரியாத்தான் போச்சுது. தூக்குத் தண்டனை விதிக்கப்பட்டுள்ள முன்னாள் எம்.பி துமிந்த சில்வாவுக்கு பொதுமன்னிப்பு வழங்க வேண்டும் என்று ஆளுங் கட்சிக்குள்ள இருந்து எம்.பிக்கள் பலர் குரல் கொடுத்து எழுத்தில ஜனாதிபதிக்கு மனுவும் குடுத்தி 2

# துருக்கியில் இருந்து இரண்டாவது அலை




**கொழும்பு, ஒக்ரோபர் 26**
**கொரோனா வைரஸின் 2ஆம் அலை இலங்கையில் தாண்டவமாடிவரும் நிலையில் அதன் ஆரம்பப்புள்ளியை புலனாய்வுத்துறையினர் கண்டுபிடித்துள்ளனர். துருக்கியில் இருந்து இலங்கைக்குவந்த உக்ரைன் விமான ஊழியர்களாலேயே வைரஸ் பரவியுள்ளது.** 2

## புதையல் தோண்ட முற்பட்டோர் கைது

*முல்லைத்தீவு, ஒக். 26*
முல்லைத்தீவு முள்ளி வாய்க்கால் பகுதியில் புதையல் தோண்ட முற்பட்ட 5 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்று முல்லைத்தீவு பொலிஸார் தெரி 2

## லேடி றிஜ்வே மருத்துவமனையில் 7 சிறுவர்களுக்கு கொரோனா


*கொழும்பு, ஒக். 26*
பொரளை லேடி றிஜ்வே சிறுவர் மருத்துவமனையில் 10 புதிய கொரோனா தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர். ஏழு சிறுவர்களுக்கும் மூன்று தாய்மார்களுக்குமே இவ்வாறு தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. 2

எம்.சி.சி ஒப்பந்த விவகாரம்:

## அரசுடன் முரண்படுகின்றன தேசியவாத அமைப்புக்கள்

*கைச்சாத்திடப்படும் பட்சத்தில் கடும் விளைவென எச்சரிக்கை*

*கொழும்பு, ஒக். 26*
'அமெரிக்காவுடனான எம்.சி.சி உடன்படிக்கையில் கைச்சாத்திடும்பட்சத்தில் அதுவே அரசாங்கத்தின் இறுதிப் பயணமாக அமையும் என்பதுடன் அரசாங்கத்துக்கான ஆதரவையும் விலக்கிக் கொள்வோம்.' என்று கடும் போக்குடைய சிங்கள தேசியவாத அமைப்புகளின் கூட்டணியான 'தேசிய ஒருங்கமைப்பு ஒன்றியம்' எச்சரிக்கை விடுத்துள்ளது. அமெரிக்க இராஜாங்க செயலரின் இலங்கைப் பயணம் 2




## யாழ். மாநகர எல்லைக்குட்பட்ட வியாபாரிகளுக்கு பி.சி.ஆர்.

*யாழ்ப்பாணம், ஒக். 26*
யாழ். மாநகர சபை எல்லைப் பகுதிக்குள் உள்ள அனைத்து மீன் சந்தைகளிலும் விற்பனையில் ஈடுபடும் வியாபாரிகள் பி.சி.ஆர் பரிசோதனைக்கு உட்படுத்தப்படவுள்ளனர். பேலியகொட மீன் சந்தையைத்தொடர்ந்து திருகோணமலை மீன்சந்தை மற்றும் சில பிரதேசங்களில் விற்பனையில் ஈடுபட்ட வியாபாரிகள் சிலரில் கொரோனாத் தொற்று இனங்காணப்பட்டதாலும் நுகர்வோர் இது தொடர்பில் தேவையற்ற அச்சம் 2

University Grants Commission - Sri Lanka

## வெட்டுப்புள்ளிகள் வெளியாகின

*கொழும்பு, ஒக். 26*
2019ஆம் ஆண்டுக்கான கல்வி பொதுத் தராதர உயர்தரப் பரீட்சைக்கான வெட்டுப்புள்ளிகள் தற்போது இணையத்தளத்தில் வெளியிடப்பட்டுள்ளன. இம்முறை 41 ஆயிரத்து 500 பேர் பல்கலைக் கழகங்களுக்கு இணைத்துக்கொள்ளப்படவுள்ளனர் என பல்கலைக்கழக 2



## பொம்பியோவின் வருகை எம்.சி.சிக்கானது இல்லை!

*கைச்சாத்திடமாட்டோம் என்கிறது இலங்கை அரசு*

*கொழும்பு, ஒக். 26*
அமெரிக்க வெளிவிவகாரத் துறை அமைச்சர் மைக் பொம்பியோவின் இலங்கைப் பயணம் ஒப்பந்தங்களை நோக்காகக் கொண்டது அல்ல. இந்தப் பயணத்தின்போது எவ்வித உடன்படிக்கைகளிலும் அரசு கைச்சாத்திடாது என்று அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் 2

## துமிந்தவுக்கு பொது மன்னிப்பு: தமிழ் எம்.பிக்கள் கையொப்பம்!

*கொழும்பு, ஒக். 26*
மரண தண்டனைக் கைதியான முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் துமிந்த சில்வாவுக்கு பொதுமன்னிப்பு வழங்குமாறுகோரி ஆளுங் கட்சி எம்.பிக்களால் கைச்சாத்திடப்பட்ட மனுவில் தமிழ் முற்போக்கு கூட்டணி எம்.பிக்களும் கையொப்பமிட்டுள்ளனர்.
இந்தத் தகவலை 'சுடர்ஒளி'யிடம் நேற்று உறுதிப்படுத்திய முற்போக்கு கூட்டணியி எம்.பிக்கள் இருவர், பொதுவானதொரு இணக்கப்பாட்டின் அடிப்ப 2

# துருக்கியில் இருந்து...

இது தொடர்பான புலனாய்வு அறிக்கை அரச உளவுப்பிரிவால் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச, பிரதமர் மஹிந்த ராஜபக்ச ஆகியோருக்கும் பாதுகாப்புச் சபையிடமும் கையளிக்கப் பட்டுள்ளன.

உக்ரைன் விமான சேவை ஊழியர்கள் 11 பேர் கடந்த செப்ரெம்பர் 11ஆம் திகதியே இலங்கைக்கு வந்துள்ளனர். சீதுவை பகுதியில் உள்ள நட்சத்திர ஹொட்ட லொன்றில் இவர்கள் சுயதனி மைக்கு உட்படுத்தப்பட்டிருந்த னர். இவர்களில் உக்ரைன் நாட்டைச் சேர்ந்த ஒருவருக்கு செப்ரெம்பர் 13ஆம் திகதி வைரஸ் தொற்று உறுதியானதை யடுத்து அவர் ஐ.டி.எச் மருத்துவ மனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

இவர்கள் தங்கியிருந்த ஹொட்ட லில் உள்ள 60 பணியாளர்களில் 18 பேர் நாளாந்தம் வீடுகளுக்கு சென்றுவரும் ஊழியர்களாவர். இவர்கள் செப்டம்பர் 11 முதல் 13ஆம் திகதிவரை வீடுகளில் இருந்தே வேலைக்கு வந்துள்ளனர். தனிமைப்படுத்தல் சேவையை வழங்கும் ஹொட்டல்களில் உள்ள பணியாளர்கள் 14 நாட்கள் சுய தனிமைக்கு உட்படுத்தப்பட வேண்டும் என வழிகாட்டல் அறிக்கையில் குறிப்பிடப்பட்டி ருந்தாலும் அந்த நடைமுறையை மீறி 18 பேருக்கும் வீடுகளுக்கு சென்றுவருவதற்கு நிர்வாகத்தில் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

இவ்வாறு வீடுகளுக்குசென்றுவந்த 18 பேரில் ஐவருக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதியாகியுள் ளது. இவர்களில் மூவர் 11, 12 மற்றும் 13ஆம் திகதிகளில் வேலைக்கு வந்துள்ளனர். இவர்க ளின் உடலில் இருந்த வைரஸ் வீரியம் மிக்கது. மினுவாங்கொட ஆடைத்தொழிற்சாலையின் முதலாவது தொற்றாளர் அடை யாளம் காணப்பட்டபோது அவரின் உடலிலும் இதற்கு ஒப்பான வைரஸே இருந்துள்ளது. இதன்மூலம் துருக்கியில் இருந்து வந்தவர்களே 2ஆம் அலையின் ஆரம்பப்புள்ளி என ஊகிக்கப் பட்டுள்ளது.

ஹொட்டல் ஊழியர் ஒருவர் சிலாபத்தில் இருந்து பொதுப் போக்குவரத்து ஊடாகவே தினம் வந்து சென்றுள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது. (ம-44)

## புதினம் தெரியுமோ

ருக்கினம். அவையளுக்கு துமிந்த செய்த அரசியல் கடமைகளுக்கு நன்றிக் கடனாக்கூட இது இருக்கலாம் எண்டுதான் இப்ப கொழும்பெல்லாம் ஒரே பேச்சு. இதில ஆகப்பெரிய பகிடி என்னெண்டா 20ஆவது திருத்தத்த ஆதரிச்ச தமிழ் எம்.பி ஒராள கட்சியில இருந்து நிப்பாட்டி போர் முழக்கம் செய்த ஒரு தமிழ் முற்போக்குக் கூட்டணிக் காரரும் துமிந்தவ வெளில கொண்டு வாறத்துக்கு சப்போர்ட்டாம். இதுக்கு அவை பென்னம்பெரிய நிபந்தனையெல்லாம் விதிக்கல. துமிந்தவுக்கு சொந்தமான ஊடகத்தில தங்கடயும் கட்சியின்ரயும் செய்திகளை கவனிச்சு அடிக்கடி போட வேனும் எண்டுறதுதான் மலராம். அப்ப பாருங்கோவன் இவையின்ர கோரிக்கைகள. பிறகென்ன துமிந்தவுக்காக களமிறங்கின புரோக்கர் மாரும் அதுக்குரிய ஏற்பாடுகள தடல் புடலா செய்திருக்கினம். இன்னும் கொஞ்ச நாளில துமிந்த வெளில வருவார். அதுக்குப் பிறகு செய்திகள் ஓங்கி ஒலிக்கும். இனி அடுத்த கொலைகாரன் எவன் வெளில வரப்போறானோ! எல்லாம் அந்த சூரிய பகவானுக்குத்தான் வெளிச்சம்.


– பட்சி

## புதையல் ....

வித்தனர். முள்ளி வாய்க்கால் முருகன்கோவில் வீதியில் இவர்கள் கைது செய்யப்பட் டுள்ளனர். கைது செய்யப் பட்ட ஐவரில் இருவர் ஒட்டுசுட்டானைச் சேர்ந்த வர்கள், மூவர் முள்ளிய வளையைச் சேர்ந்தவர்கள் என்று பொலிஸார் தெரிவித் தனர். அவர்களை நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை மேற் கொள்ளப்பட்டுள்ளது. (ம-19)

## 7 சிறுவர்களுக்கு...

இவ்வாறு புதிய கொரோனாத் தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டுள்ள அனைவரும் பேலிய கொட கொத்தணிப் பரவலுடன் தொடர்புடைய வர்கள் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-இ)



## வெட்டுப்புள்ளிகள்....

மானியங்கள் ஆணைக் குழுவின் தலைவர் பேராசிரியர் சம்பத் அமரதுங்க குறிப்பிட்டார். மருத்துவ பீடம், பொறியியல் பீடம் உள்ளிட்ட சில துறைகளுக்கு இம் முறை அதிக மாணவர் களை இணைத்துக் கொள்ள தீர்மானிக்கப் பட்டுள்ளது என்றும் அவர் குறிப்பிட்டார். 2019ஆம் ஆண்டு உயர்தரப் பரீட்சை புதிய மற்றும் பழைய பாடத்திட்டங்களுக்கு அமைய நடத்தப்பட் டமை குறிப்பிடத் தக்கது. (ம-இ)

## யாழ். மாநகர...

கொள்வதைத் தடுக்கும் நோக்கிலும் இந்தப் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட வுள்ளன.

குருநகர், பாசையூர், சின்னக்கடை, நாவாந் துறை, கல்வியங்காடு உள்ளிட்ட அங்காடி களில் இருந்து குறிப்பிட்டளவு எண்ணிக் கையானோருக்கு முதல் கட்டமாக பரிசோ தனைகள் இடம்பெறவுள்ளன. மரக்கறி வியாபாரிகளிடத்திலும் இந்தப் பரிசோத னைகளை மேற்கொள்வது தொடர்பில் ஆராயப்பட்டு வருகின்றது. (ம-இ)

## அரசுடன் முரண்படுகின்றன...

தொடர்பில் கருத்து வெளியிடுகையிலேயே மேற்படி ஒன்றியத்தின் ஏற்பாட்டாளர் கலாநிதி குணதாச அமரசேகர மேற்கண்டவாறு கூறினார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

'நெருக்கடியான சூழ்நிலையிலேயே அமெரிக்க இராஜாங்கச் செய லர் இலங்கை வருகின்றார். அவரின் பயண நோக்கம் தொடர்பில் அரசு இன்னும் அறிவிக்கவில்லை. அது தொடர்பான தகவல்களை நாட்டு மக்களுக்கு வழங்குமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

அமெரிக்க இராஜாங்கச்செயலர் இங்கு வருவதில் எமக்கு பிரச்சினை இல்லை, ஆனால் இலங்கையை காலணித்துவ நாடாக்குவதற்கு உலக வல்லரசுகளால் முன்னெடுக்கப்படும் நடவடிக்கைகள் தொடர்பில் விழிப்பாகவே இருக்கவேண்டும். குறிப்பாக எம்.சி.சி உடன்படிக்கை யில் அரசு ஒருபோதும் கைச்சாத்திடக்கூடாது.

அமெரிக்க இராஜாங்கச் செயலர் அழுத்தம் கொடுத்தால்கூட, முடியாது என்ற பதிலை உறுதியாகக் கூறிவிடவேண்டும். அவ்வாறு இல்லாமல் உடன்படிக்கை கைச்சாத்திடப்படுமானால் அதுவே அரசாங்கத்தின் இறுதிப்பயணமாக அமையும். சிங்கள தேசியவாத அமைப்புகள் எல்லாம் அரசுக்கான ஆதரவை மீளப்பெற்றுக்கொள்ளும். அதற்கான நடவடிக்கையில் நாம் இறங்குவோம்.' என்றார். (-ம44)



## பொம்பியோவின் வருகை...

தெரிவித்தார்.

பெரமுனவின் தலைமையத்தில் இன்று இடம்பெற்ற செய்தியா ளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

'சீனாவின் உயர்மட்ட தலைவர் ஒருவர் அண்மையில் இலங் கைக்கு வந்திருந்தார். அவரின் வருகைக்கு முன்னர் பிரதமர் மஹிந்த ராஜபக்சவுக்கும், இந்திய பிரதமர் நரேந்திர மோடிக்கு மிடையில் காணொளி மாநாடு மூலம் கலந்துரையாடலொன்று இடம்பெற்றது. தற்போது அமெரிக்க வெளிவிவகார அமைச்சர் இங்கு வரவுள்ளார். நாடுகளுக்கிடையிலான உறவை வலுப்படுத்துவதற்காக இராஜ தந்திர மட்டத்தில் இவ்வாறான வருகைகள், சந்திப்புகள் இடம் பெறுவது வழமையே. எனவே, ஒப்பந்தங்களில் கைச்சாத்திடு வதை மையப்படுத்தி அமெரிக்க இராஜாங்கச்செயலரின் இலங்கை விஜயம் அமைய வில்லை.

இலங்கையானது நடுநிலையான வெளிநாட்டுக் கொள்கை யையே கடைபிடித்துவருகின் றது. அனைத்து நாடுகளுடனும் நட்புறவைப் பேணுவோம், ஆனாலும் எந்தவொரு நாட்டுக் கும் இலங்கையை பயன்படுத் திக்கொள்வதற்கு அனுமதி வழங்கப்படமாட்டாது என எமது ஜனாதிபதி தெளிவாக அறிவித்துவிட்டார். அதே போல் உள்விவகாரங்களில் தலையிடுவதற்கான வாய்ப்பை யும் வழங்கமாட்டோம்.

அமெரிக்க இராஜாங்க செயல ரின் இலங்கை பயணத்தின் போது எந்தவொரு உடன்படிக் கையிலும் கைச்சாத்திடுவதற்கு நாம் எதிர்பார்க்கவில்லை. 12 மணிநேரம் குறுகிய பயணத்தை மேற்கொண்டே இங்கு வருகி றார். ஜனாதிபதி, பிரதமர் மற்றும் வெளிவிவகார அமைச் சர் ஆகியோரை சந்தித்து பேச்சு நடத்துவார். - என்றார். (ம44)

## வடைக்கடை வியாபாரிக்கு கொரோனா

பொலன்னறுவ பகமுன பகுதியில் வடை விற்பனைக் கடை ஒன்றை நடத்திச் சென்ற ஒருவருக்கு கொரோ னாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

பகமுன பகுதியைச் சேர்ந்த 34 வயதுடைய ஒருவரே இவ்வாறு கொரோனா தொற்றுக்கு உள்ளாகியுள் ளார். இவர் கடந்த தினங்க ளுக்கு முன்னர் இறால் வாங்குவதற்காக பேலிய கொட மீன் சந்தைக்கு வந்துள்ளார் எனத் தெரி விக் கப்படுகின்றது. அதன டிப்ப டையில் குறித்த நபரு டன் தொடர்புடையவர்கள் தனி மைப்படுத்தலுக்கு உட் படுத் தப்பட்டுள்ளனர் எனத் தெரி விக்கப்படுகின்றது.(ஐ-இ)

## துமிந்தவுக்கு பொது மன்னிப்பு...

டையிலேயே இந்த முடிவை எடுத்துள் ளோம் எனவும் கூறினர்.

முல்லேரியா துப்பாக்கிச்சூட்டு சம்பவத் தில் முன்னாள் எம்.பி பாரத லக்ஷ்மன் பிரேமச்சந்திர உட்பட சிலர் கொல்லப் பட்டனர். இது தொடர்பான வழக்கில் துமிந்த சில்வாவுக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

அரசியல் பழிவாங்கல் நோக்கில், விசார ணைகள் திரிவுபடுத்தப்பட்டே துமிந்த சில்வாவுக்கு இவ்வாறானதொரு தண் டனை பெற்றுக்கொடுக்கப்பட்டுள்ளது என சந்தேகிக்கும் ஆளுங்கட்சி எம்.பிக்கள், இது தொடர்பில் பலகோணங்களில் கருத்துகளை வெளியிட்டுவருகின்றனர்.

இந்நிலையிலேயே துமிந்த சில்வாவுக்கு பொதுமன்னிப்பு வழங்குமாறுகோரி ஆளுங்கட்சி எம்.பிக்கள் சிலர் கையொப்ப மிட்டு ஜனாதிபதிக்கு பிரதமர் ஊடாக மனுவொன்றை அனுப்பிவைத்துள்ளனர். இதில் ஐக்கிய மக்கள் சக்தியில் உள்ள தமிழ் முற்போக்கு கூட்டணி எம்.பிக்களும் கையொப்பமிட்டுள்ளனர். (ம-44)

# அத்தியாவசியப் பொருள்கள் அதிக விலைக்கு விற்பனை

கொழும்பு, ஒக்.26

தனிமைப்படுத்தல் ஊரடங்குச் சட்டம் அமுலாகியுள்ள சில பகுதிகளில் அரிசி உள்ளிட்ட அத்தியாவசியப் பொருள்கஞம், முகக் கவசங்களும் அதிக விலைக்கு விற்பனை செய்யப்படுகின்றன என தகவல் கிடைத்துள்ளது என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அஜித் ரோஹண தெரிவித்துள்ளார்.

இவ்வாறான செயற்பாடுகளில் ஈடுபடுவதைத் தவிர்க்குமாறு சம்பந்தப்பட்ட வர்த்தக தரப்பினருக்கு தாம் அறிவுறுத்தியுள்ளோம் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். இது குறித்து அவதானம் செலுத்தப்படுவதுடன், நுகர்வோர் அதிகார சபைக்கு அறிவித்து அடுத்த கட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளது என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ற-இ)

# ஊரடங்குச் சட்டம்: 1,076 பேர் கைது

கொழும்பு, ஒக்.26

தனிமைப்படுத்தல் ஊரடங்குச் சட்டத்தை மீறிய குற்றச்சாட்டில் இதுவரை ஆயிரத்து 76 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளரும் பிரதிப் பொலிஸ் மா அதிபருமான அஜித் ரோஹன தெரிவித்துள்ளார்.

இன்று காலை 6 மணியுடன் நிறைவடைந்த கடந்த 24 மணிநேர காலப் பகுதியில் 152 பேர் கைது செய்யப்பட்டுள்ளதுடன், 16 வாகனங்களும் கைப்பற்றப்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

ஒக்ரோபர் 4 ஆம் திகதி தனிமைப்படுத்தல் ஊரடங்குச் சட்டம் பிறப்பிக்கப்பட்டதிலிருந்து, இதுவரை 156 வானங்கள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (ற-இ)

# மோட்டார் வாகன திணைக்களங்களும் பூட்டு

கொழும்பு, ஒக்.26

நாரஹேன்பிட்டிய மற்றும் வேரஹெர மோட்டார் வாகனப் போக்குவரத்துத் திணைக்களத்தின் பிரதான அலுவலகங்களை மறு அறிவித்தல் வரை மூடுவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. அத்துடன், தபால் மற்றும் உப தபால் அலுவலகங்களின் ஊடாக கடிதங்களை விநி யோகிக்கும் நடவடிக்கையை மறு அறிவித்தல் வரை இரத்து செய்வதற்கும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதனடிப்படையில் மேல் மாகாணத்திலும், காலி பிரதான தபால் காரியாலயம் மற்றும் அதன் உப தபால் அலுவலகங்கள் உட்பட ஊரடங்குச் சட்டம் பிறப்பிக்கப்பட்டுள்ள பகுதிகளில் கடிதம் விநியோகித்தல் இரத்து செய்யப்பட்டுள்ளது என்று தபால்மா அதிபர் தெரிவித்துள்ளார். (ற-இ)




# ஓமான் விமானசேவை மீண்டும் ஆரம்பம்

கொழும்பு, ஒக்.26

ஓமான் நாட்டின் தேசிய விமான சேவையான "சுல்டானேட் ஓமான்" இலங்கைக்கான சேவையை நேற்று முதல் ஆரம்பித்துள்ளது.

இந்நிலையில் ஓமான் எயார் குவைத், பஹ்ரெய்ன், மற்றும் இலங்கை ஆகிய நாடுகளுக்கு தமது சேவையை நீடித்துள்ளது என சுல்டான்னேட் ஓமான் அறிவித்துள்ளது. இச் சேவை கொழும்புக்கு வாரத்தில் இரண்டு தடவைகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

தமது விமானத்தில் பயணிப்போர் கொரோனா வைரஸ் முன்னேற்பாடுகள் தொடர்பில் உறுதி செய்யப்படுவர் என்று ஓமான் எயார் அறிவித்துள்ளது. (ந-இ)

# ஊரடங்கு பகுதிகளில் விளையாட்டுக்களுக்கும் தடை

கொழும்பு, ஒக்.26

ஊரடங்குச் சட்டம் அமுலில் இருக்கும் பகுதிகளில், காட் விளையாட்டு உட்பட குழுவாக விளையாடத் தடை விதிக்கப்பட்டுள்ளது என பொலிஸார் அறிவித்துள்ளனர்.

கம்பஹா மாவட்டத்தில் 37 பொலிஸ் பிரிவுகளிலும், குளியாப்பிட்டியவில் 5 பொலிஸ் பிரிவுகளிலும் கொழும்பு மாவட்டத்தில் 15 பொலிஸ் பிரிவுகளிலும் களுத்துறையில் மூன்று பொலிஸ் பிரிவுகளிலும், வெல்லம்பிட்டிய, கொத்தட்டுவ, முல்லேரியாவ மற்றும் வெலிக்கடை ஆகிய பொலிஸ் பிரிவுகளிலும் ஊரடங்குச் சட்டம் அமுல்படுத்தப்பட்டுள்ளது.

ஊரடங்குச் சட்டம் அமுலில் இருக்கும் பிரதேசங்களில், வீதிகளில், ஒழுங்கைகளில் பொதுமக்கள் ஒன்றுகூடமுடியாது.

அத்துடன் அக்கம் பக்கத்தினருடன் விளையாடுவதற்கும் தடைவிதிக்கப்பட்டுள்ளது. சமூக இடைவெளியை பேணும் வகையிலேயே இந்த அதிரடி நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன என தெரிவிக்கப்பட்டுள்ளது. (ந-இ)

# பி.சி.ஆர் சோதனைக்கு இடையூறு ஏற்படுத்தியவர் விளக்கமறியலில்

காலி, ஒக்.26

காலியில் மீனவர்களுக்கு பி.சி.ஆர் பரிசோதனை நடத்தும்போது மருத்துவர்கள் உட்பட சுகாதார அதிகாரிகளுக்கு தடைகளை ஏற்படுத்திய மீனவரை விளக்கமறியலில் வைக்குமாறு காலி நீதவான் உத்தரவிட்டுள்ளார்.

அத்துடன் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள மீனவரின் மனநலம் தொடர்பான மருத்துவப் பரிசோதனையை பெற்றுக் கொள்ளுமாறும் அவர் அதிகாரிகளுக்கு உத்தரவிட்டுள்ளார்.

காலியில் மீன்பிடி மற்றும் மீன் விற்பனையில் ஈடுபடும் நபர்களுக்கு பி.சி.ஆர் பரிசோதனை நடத்துவதற்காக நேற்றைய தினம் மாதிரிகள் பெறப்பட்டன.

அப்போது அந்த இடத்துக்குச் சென்ற இந்த நபர், பரிசோதனைகளுக்கான மாதிரிகளைப் பெற்றுக்கொண்டிருந்த பொது சுகாதாரப் பரிசோதகர்கள் உட்பட அதிகாரிகள் மற்றும் பரிசோதனைக்காக மாதிரிகளை வழங்கிக் கொண்டிருந்தவர்களை கடுமையாக விமர்சித் துள்ளார்.

இதனையடுத்து தமது சுகாதார அணியினரின் பணிகளுக்கு தடையை ஏற்படுத்தினார் எனக் குற்றம் சுமத்தி கடமையில் ஈடுபட்டிருந்த சுகாதார வைத்திய அதிகாரி காலி தலைமையக பொலிஸ் நிலையத்துக்குத் தெரியப்படுத்தினார். அதனைத் தொடர்ந்து, அங்கு சென்ற பொலிஸார் அந்த நபரை கைது செய்துள்ளனர். இதன்போது சந்தேகநபரை பொலிஸார் இன்று நீதிமன்றத்தில் ஆஜர்படுத்திய போதே நீதிவான் அவரை விளக்கமறி யலில் வைக்குமாறு உத்தரவிட்டுள்ளார். (ந-இ)

# வழக்குகள் அனைத்தும் ஒத்திவைப்பு

கொழும்பு, ஒக்.26

ஊரடங்குச் சட்டம் பிறப்பிக்கப்பட்டுள்ள காலப்பகுதிக்குள், விசாரணை செய்வதற்காக ஏற்கனவே தீர்மானிக்கப்பட்டிருந்த அனைத்து வழக்குகளும் ஒத்தி வைக்கப்பட்டுள்ளது என்று உயர்நீதிமன்றம் அறிவித்துள்ளது.

இவ்வாறு ஒத்தி வைக்கப்பட்ட வழக்குகள், விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படும் திகதி குறித்து பின்னர் அறிவிக்கப்படும் என்றும் உயர் நீதிமன்றம் மேலும் தெரிவித்துள்ளது. (ற-இ)

# இரட்டைக் குடியுரிமை விவரங்கள் வெளியிட வெளிநாடுகள் மறுப்பு

கொழும்பு, ஒக்.26

பத்து வெளிநாடுகள் இலங்கையின் இரட்டைக் குடியுரிமை பெற்றவர்கள் தொடர்பான தகவல்களை வெளியிட மறுத்துள்ளன என சிங்கள இணையத்தளம் ஒன்று தெரிவித்துள்ளது.

கனடா, பிரித்தானியா, ஜேர்மனி, பிரான்ஸ், ஒஸ்ரியா, நோர்வே, சுவீடன், சுவிஸர்லாந்து, ஆஸ்திரேலியா, அமெரிக்கா ஆகிய நாடுகளே இலங்கையில் இரட்டைக் குடியுரிமை பெற்றுள்ளவர்கள் தொடர்பான தகவல்களை மறைத்துள்ளன என அதில் கூறப்பட்டுள்ளது.

இந்த இரட்டைக் குடியுரிமை பெற்ற பிரஜைகளில் இலங்கைக்குத் தேவையான நபர்கள் இருப்பதன் காரணமாகவே இந்தத் தகவல்கள் மறைக்கப்பட்டுள்ளன. இலங்கையில் இரட்டைக் குடியுரிமை பெற்றவர்களில் பெரும்பாலானவர்கள், பிரித்தானியா, சுவிஸர்லாந்து, பிரான்ஸ் மற்றும் அமெரிக்கா ஆகிய நாடுகளில் வசித்து வருகின்றனர் எனவும் அந்த இணையத்தளம் கூறியுள்ளது. (ந-இ)

# கொழும்பு நகரில் 5,237 பி.சி.ஆர்.

கொழும்பு, ஒக்.26

மினுவாங்கொட கொவிட்-19 கொத்தணிப் பரவல் கண்டுபிடிக்கப்பட்டதைத் தொடர்ந்து கொழும்பு நகராட்சி மன்ற எல்லைக்குள் மொத்தம் 5,237 பி.சி.ஆர். சோதனைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இந்த சோதனைகளின் மூலம் 488 கொவிட்-19 நோயாளிகள் அடையாளம் காணப்படுட்டுள்ளனர் என கொழும்பின் தலைமை வைத்திய அதிகாரி ருவன் விஜயமுனி தெரிவித்தார்.

இதேவேளை நேற்றைய தினம் கொழும்பு நகராட்சி மன்ற எல்லைக்குள் 288 பி.சி.ஆர். சோதனைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நஇ)



# இரண்டு நாள்களுக்கு நாடாளுமன்றம் பூட்டு

கொழும்பு, ஒக்.26

கொரோனா அச்சம் காரணமாக நாடாளுமன்றக் கட்டடத் தொகுதி இரண்டு நாள்களுக்கு மூடப்பட்டுள்ளது என அறிவிக்கப்பட்டுள்ளது. இதனால் அதன் பணியாளர்கள் வீடுகளில் இருக்குமாறும் அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

நாடாளுமன்ற பாதுகாப்புக்காக சேவையில் அமர்த்தப்பட்ட விசேட அதிரடிப்படையின் உறுப்பினர்கள் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர். இந்த விசேட அதிரடிப்படையினருக்கு கொரோனாத் தொற்று இருப்பது கண்டறியப்பட்டதையடுத்து இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

நாடாளுமன்றக் கட்டடத் தொகுதி முற்றாக கிருமித் தொற்று நீக்கம் செய்யப்படவுள்ளது டன், நாளைமறுதினம் நாடாளுமன்றம் மீண்டும் பணிகளை ஆரம்பிக்கவுள்ளது என்றும் தெரிவிக்கப்படுகின்றது. (ற-இ)

# மாகந்துர மதுஷ் பெயரில் டுபாயில் நட்சத்திர ஹொட்டல்

கொழும்பு, ஒக்.26

அண்மையில் கொலைசெய்யப்பட்ட பாதாள உலகக்குழுத் தலைவர் மாகந்துர மதுஷ் டுபாயில் 3 நட்சத்திர ஹொட்டல் ஒன்றை கொள்வனவு செய்துள்ளார்.


400 கோடி ரூபா பணம் செலவிட்டு அவர் குறித்த ஹொட்டலை கொள்வனவு செய்துள்ளார் என பொலிஸ் விசாரணையில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. 60 அறைகளைக் கொண்ட இந்த ஹொட்டலில் நீச்சல் குளங்கள், நிகழ்வு மண்டபங்கள் உட்பட அனைத்து வசதிகளும் உள்ளடக்கப்பட்டுள்ளன.

போதைப்பொருள் விற்பனையில் கிடைத்த வருமானத்தில் இந்த ஹொட்டலை கொள்வனவு செய்வதற்கு 3 வருடங்களுக்கு முன்னர் மதுஷ் முதலீடு செய்யதுள்ளார்.

அத்துடன் மாகந்துரே மதுஷ் போலிப் பெயரில் விமான கடவுச்சீட்டு தயாரித்து டுபாயில் தங்கியிருந்ததால் அவர் இந்த ஹொட்டலை தனக்கு நெருக்கமான இந்திய நாட்டவரின் பெயரில் கொள்வனவு செய்துள்ளார் எனவும் விசாரணைகளில் தெரியவந்துள்ளது. (ந-இ)

# ஆபத்துக்கூடிய இடங்கள் வரைபடம் வெளியீடு

கொழும்பு, ஒக்.26




இலங்கையில் கொவிட் -19 நோய்த் தொற்றுக்கான ஆபத்துக் கூடிய இடங்கள் தொடர்பான விவரங்களை சுகாதார அமைச்சின் தொற்று நோயியல் தடுப்பு பிரிவு வெளியிட்டுள்ளது.

குறிப்பிட்ட பகுதிகளில் மருத்துவ அதிகாரிகளின் வகையீட்டுக்கு அமைய இந்த வரைபடம் வெளியிடப்பட்டுள்ளது. கடந்த 14 நாட்களில் பதிவான தகவல்கள் தொடர்பிலான விபரங்களின் அடிப்படையில் இந்த வரைபடத் தகவல்கள் வெளியிடப்பட்டுள்ளன.

நோயாளிகளின் எண்ணிக்கை மற்றும் தனிமைப்படுத்தல் நிலையங்களுக்கு நோயாளிகளை அனுப்பிவைத்தல் என்பன வற்றின் அடிப்படையில் இந்த விபரங்கள் வெளியிடப்பட்டுள்ளன. சிவப்பு நிறத்தில் காட்டப்பட்டுள்ளவை அதி ஆபத்து வாய்ந்த பகுதிகளாக அடையாளப்படுத்தப் பட்டுள்ளன. கடந்த 22ஆம் திகதி வெளியிடப்பட்டுள்ள இந்த வரைபடம் 14 நாட்களுக்கான தரவுகளை உள்ளடக்கி தயார் செய்யப்பட்டுள்ளது. (ந-இ)

# கொட்டகலவில் மூவருக்கு தொற்று

நுவரெலியா, ஒக்.26



கொட்டகலை பிரதேச சபைக்குட்பட்ட பகுதியில் மூவருக்கு கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. கொட்டகல சின்ன டிரேட்டன், வூட்டன் ஹில்ஸ், தலவாக்கலை தெவிசிறிபுர ஆகிய பகுதியைச் சேர்ந்தவர்களே தொற்றுக்குள்ளாகி உள்ளனர்.

மூவரும் பேலியகொட மீன் சந்தையில் தொழில்புரிந்து வீடு திரும்பிய நிலையில் அவர்களிடம் மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனையில் தொற்று உறுதியாகியுள்ளது. அதையடுத்த மூவரின் குடும்பத்தினர் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர்.

தொற்றுக்குள்ளான மூவரும் வைத்தியசாலைக்கு அழைத்துசெல்லப்பட்டுள்ளனர். இதையடுத்து கொட்டகல நகரிலுள்ள அனைத்து வர்த்தக நிலையங்களும் மூடப்பட்டுள்ளன என்று கொட்டகல பிரதேச சபையின் தலைவர் ராஜமணி பிரசாந்த் தெரிவித்தார். (வ-இ)

# குடும்பத்தவர்களுடன் மட்டுமே விழாக்கள்

கொழும்பு, ஒக்.26

நாட்டில் கொவிட் 19 தொற்று அதிகரித்து வரும் நிலையில் விழாக்கள் மற்றும் இறுதிச் சடங்கு ஆகியன நடைமுறைப்படுத்துதல் தொடர்பில் பொலிஸ் ஊடகப் பேச்சாளர், பிரதி பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெளிவுபடுத்தியுள்ளார்.

ஊடரங்குச் சட்டம் அமுலில் உள்ள பகுதிகள் மற்றும் ஏனைய பகுதிகளில் இடம்பெறவுள்ள திருமண விழா, விளையாட்டு விழாக் கள் போன்ற அனைத்து விழாக்களிலும் பங்கேற்பவர்களின் எண்ணிக்கை வரையறுக்கப்பட்டு இருக்க வேண்டும். திருமணம் விழாவின்போது சுகாதாரப் பிரிவில் ஆலோசனை பெற்று, பொலிஸாருக்கு அறிவித்து திரும ணத்தில் கலந்துகொள்ள வேண்டிய முக்கி யமான உறுப்பினர்கள் மாத்திரம் கலந்துகொண்டு திருமண விழாவை நடத்த முடியும்.

இறுதிச் சடங்கின்போது வேறொரு இடத்திலிருந்து வருதல் மற்றும் ஊரடங்கு உத்தரவு பிறப்பித்த இடத்திருந்து ஊடரங்கு பிறப்பிக்காத இடத்துக்கு வருதல் போன்றவற்றுக்கு தடை விதிக்கப்பட்டுள்ளது. இருப்பினும் நெருங்கிய உறவினராக இருந்தால் அனுமதி வழங்கப்படும் என்று பிரதி பொலிஸ்மா தெரிவித்துள்ளார். (ந-இ)

# சதொச, சிறப்பு அங்காடிகள் ஊடாக பொருள்கள் விநியோகம்

கொழும்பு, ஒக்.26

ஊரடங்குச் சட்டம் அமுல்படுத்தப்பட்டுள்ள பகுதிகளிலுள்ள சதொச மற்றும் சிறப்பு அங்காடிகளின் ஊடாக பொருள்களை விநியோகிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்துள்ளார்.

90 ஆயிரம் மெட்றிக் தொன் கிலோ கிராமுக்கும் அதிகளவான சீனி நாட்டிலுள்ள களஞ்சியசாலைகளில் களஞ்சியப்படுத்தப்பட்டுள்ளது. அத்துடன், ஏனைய அத்தியாவசிய பொருள்களை இலங்கைக்கு கொண்டுவருவதற்கு தடைகள் எதுவும் இல்லை.

எனவே, ஊரடங்கு அமுலில் உள்ள பகுதிகளில் சதொச மற்றும் சிறப்பு அங்காடிகளின் ஊடாக பொருள்களை விநியோகிப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

எனவே, பொதுமக்கள் அவசியமற்ற வகையில் பொருள்களை களஞ்சியப்படுத்துவதற்கான தேவை இல்லை. நாடு முழுவதையும் முடக்குவதற்கான தீர்மானத்தை அரசாங்கம் இதுவரையில் மேற்கொள்ளவில்லை.

கொரோனாத் தொற்று உறுதியானவர்கள் அடையாளம் காணப்படுகின்ற பகுதிகளில் மாத்திரம் ஊரடங்குச் சட்டத்தை அமுல்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது எனவும் அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்துள்ளார். (ந-இ)

# ஆற்றில் மூழ்கி இளைஞன் பலி

பலாங்கொடை, பின்னவல பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பொல்தும்பை சமன் தேவாலய ஆற்றில் நீராடச் சென்ற இளைஞர் ஒருவர் நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளார்.

பலாங்கொடை, தாமஹன பகுதியைச் சேர்ந்த பேராதனை பல்கலைகழகத்தில் முதலாம் ஆண்டில் கல்வி பயிலும் 22 வயதுடைய மாணவனே இவ்வாறு உயிரிழந்துள்ளார். குறித்த மாணவனின் சடலம் மீட்கப்பட்டு, பலாங்கொடை ஆதார வைத்தியசாலையில் பிரேத பரிசோதனைக்காக வைக்கப்பட்டுள்ளது. மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (ந-இ)

ஊரடங்கு நிலவும் இடங்கள் தொடர்பில்

## ஆலோசனை பெற தொடர்பு இலக்கங்கள்

கொழும்பு, ஒக்.26

ஊரடங்குச் சட்டம் அமுல்படுத்தப்பட்டுள்ள பகுதிகளில் அனுமதிப்பத்திரங்கள் தொடர்பில் விளக்கங்களை பெற்றுக்கொள்ள விசேட பொலிஸ் பிரிவினர் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

அவர்களை தொடர்பு கொண்டு தேவையான ஆலோசனைகளைப் பெற்றுக் கொள்ளமுடியும் என்று பொலிஸ் ஊடகப்பேச்சாளர் பிரதி பொலிஸ்மா அதிபர் அஜித்ரோஹண தெரிவித்தார்.

அதற்கமைய பொலிஸ் பிரிவுகள் மற்றும் விசேட பொலிஸ் பிரிவினரின் தொலைபேசி இலக்கங்களின் விபரங்கள் வருமாறு,

**கொழும்பு மாவட்டம்** 071-8591605

பொலிஸ் பிரிவுகள் : களனி , பேலியகொடை, கடவத்தை, கந்தானை, ராகம, ஜா எல மற்றும் கிரிபத்கொட

சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் : எம். கே.ஆர்.ஏ.குணரத்ன

**வட கொழும்பு** 071-8591574

பொலிஸ் பிரிவுகள் : கிரான்பாஸ், புளுமெண்டல், கொட்டாஞ்சேனை, முகத்துவாரம் மற்றும் மட்டக்குளி

சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் : நிரஞ்சன் அபேவர்தன

**மத்திய கொழும்பு** 071-8591554

பொலிஸ் பிரிவுகள் : மருதானை, மாளிகாவத்தை, வாழைத்தோட்டம், ஆந்திருப்பு

பொலிஸ் அத்தியட்சகர் சமரகோன்

**கம்பஹா மாவட்டம்** 071-8591610

33 பொலிஸ் பிரிவுகள்

உதவி பொலிஸ் அத்தியட்சகர் : துஷித்த குமார

**பொலிஸ் பிரிவுகள் : நீர்கொழும்பு, திவுலப்பிட்டி, கொச்சிக்கடை, சீதுவ மற்றும் கட்டுநாயக்க**

தொலைபேசி இலக்கம் : 0718591632

பொலிஸ் அத்தியட்சகர் : பாலித்த அமரதுங்க

**களுத்துறை மாவட்டம்** 071-8591690

பொலிஸ் பிரிவுகள் : பேருவளை, பயாகல மற்றும் அழுத்கம

சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் : நிசாந்த சில்வா

**பொலிஸ் பிரிவுகள் : வெல்லம்பிட்டி, கொத்தொட்டுவ மற்றும் முல்லேரியா**

பொலிஸ் அத்தியட்சகர் : ரூபசிங்க 071-8591912

# ஆபத்து குறைவடைந்தாலே கொழும்பில் ஊரடங்கு தளர்வு

கொழும்பு, ஒக்.26

கொழும்பின் பல பகுதிகளில் விதிக்கப்பட்டுள்ள ஊரடங்குச் சட்டம் இப் பகுதிகளில் கொரோனா ஆபத்து குறைவடைந்த பின்னரே நீக்கப்படும். இவ் ஊரடங்கு தொடர்பில் மூன்று நாட்களுக்கு ஒரு முறை ஆராயப்படும் என அரசாங்க தரப்பு தகவல்கள் தெரிவித்துள்ளன.



கொழும்பின் பல பகுதிகளில் நோயாளிகள் அடையாளம் காணப்பட்டுள்ளதைத் தொடர்ந்தே ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது, இவர்கள் தற்போது மிகவேகமாக பரவிவரும் பேலியகொட மீன்சந்தை தொற்றுடன் தொடர்புடையவர்கள்.

பொரளை, புறக்கோட்டை மற்றும் கோட்டை பகுதிகளில் பல நோயாளிகள் அடையாளம் காணப்பட்டுள்ளனர். இந்நிலையிலேயே முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக ஊரடங்கு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

மூன்று நாட்களுக்கு ஒரு முறை நிலைமையை அதிகாரிகள் ஆராய்வார்கள், நோய் பரவல் தணிந்தால் ஊரடங்கை நீக்குவார்கள். ஊரடங்கு நடைமுறையில் உள்ள பகுதிகளில் பி.சி.ஆர். சோதனைகள் இடம்பெறும். கொழும்பின் ஏனைய பகுதிகளில் ஊரடங்கை அமுல்படுத்துவதற்கான திட்டம் எதுவுமில்லை, குறிப்பிட்ட ஒரு பகுதியில் குறிப்பிட்ட எண்ணிக்கையான நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டால் அந்தப் பகுதியில் உடனடியாக ஊரடங்கை நடைமுறைப்படுத்துவோம் என அரச தரப்பு தகவல்கள் தெரிவித்துள்ளன. (ந-இ)

## மழைக்கு சாத்தியம்

கொழும்பு, ஒக்.26



இலங்கையின் வடமத்திய, கிழக்கு மற்றும் ஊவா மாகாணங்களிலும் முல்லைத்தீவு, வவுனியா மற்றும் மாத்தளை மாவட்டங்களிலும் பல இடங்களில் பி.ப. 2 மணிக்குப் பின்னர் மழையோ அல்லது இடியுடன் கூடிய மழையோ பெய்யக் கூடிய சாத்தியம் காணப்படுகின்றது என்று வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வுகூறியுள்ளது.

இடியுடன்கூடிய மழை பெய்யும் வேளைகளில் அந்தப் பிரதேசங்களில் தற்காலிகமாக பலத்த காற்றும் வீசக்கூடும். மின்னல் தாக்கங்களினால் ஏற்படக்கூடிய பாதிப்புகளைக் குறைத்துக்கொள்ள தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுத்துக் கொள்ளுமாறு பொதுமக்கள் அறிவுறுத்தப்படுகின்றார்கள். காங்கேசன்துறையிலிருந்து திருகோணமலை ஊடாக மட்டக்களப்பு வரையான கடற்பரப்புகளில் பல இடங்களில் மாலையில் அல்லது இரவில் மழையோ அல்லது இடியுடன் கூடிய மழையோ பெய்யக் கூடிய சாத்தியம் காணப்படுகின்றது.

நாட்டைச் சூழவுள்ள கடற்பரப்புகளில் காற்றானது மேற்கு முதல் தென்மேற்கு வரையான திசைகளிலிருந்து வீசக்கூடும். காற்றின் வேகமானது மணித்தியாலத்துக்கு 2030 கிலோ மீற்றர் வரை காணப்படும் என்று வளிமண்டலவியல் திணைக்களம் மேலும் எதிர்வுகூறியுள்ளது. (ற-இ)





## டிப்பர்– பேருந்து விபத்து

வவுனியா, ஒக்.26

டிப்பருடன் பேருந்து மோதுண்டு விபத்துக்குள்ளானதில் ஒருவர் காயமடைந்துள்ளார். இந்த விபத்து வவுனியா ஏ-9 வீதியிலுள்ள வீதி அபிவிருத்தி அதிகார சபைக்கு முன்பாக இன்று காலை இடம்பெற்றுள்ளது.

சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது,

டிப்பரொன்று ஓமந்தை நோக்கி பயணித்துக்கொண்டிருந்தபோது மோட்டார் சைக்கிள் ஒன்று திடீரென நகர சபை வீதியிலிருந்து ஏ-9 வீதிக்கு ஏற முற்பட்டுள்ளது. அந்தச் சமயத்தில் டிப்பர் சாரதி சடுதியாக வாகனத்தை நிறுத்தியுள்ளார். இதனால் டிப்பரைத் தொடர்ந்து வந்த போக்குவரத்து சபைக்கு சொந்தமான பஸ் டிப்பருடன் மோதியுள்ளது. சம்பவத்தில் பயணி யொருவர் சிறு காயங்களுக்கு உள்ளாகியுள்ளார். பஸ்ஸின் முன்பக்கம் பகுதியளவில் சேதமடைந்துள்ளது. வவுனியா போக்குவரத்து பொலிஸார் விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (வ-18)

## 15 பொலிஸ் பிரிவுகளுக்கு ரூ.5,000 வழங்கக் கோரிக்கை

கொழும்பு, ஒக்.26

ஊரடங்குச் சட்டம் பிறப்பிக்கப்பட்டுள்ள 15 பொலிஸ் பிரிவுகளுக்கு 5,000 ரூபா வழங்குவதற்கான நிதியைப் பெற்றுக் கொள்வ தற்காக நிதி அமைச்சிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது என்று கம்பஹா மாவட்டச் செயலாளர் தெரிவித்துள்ளார். அதனடிப்படையில் 4 இலட்சத்து 64 ஆயிரத்து 254 குடும்பங்களுக்கு வழங்குவதற்காக 232 கோடிக்கு அதிகமான பணத்தொகை வேண்டுமென கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

முதற்கட்டமாக மினுவங்கொட, திவுலுபிட்டிய மற்றும் வேயங்கொட பொலிஸ் பிரிவுகளுக்கு 5000 ரூபா இதுவரையில் வழங்கப்பட்டுள்ளது என்றும் தெரிவித்துள்ளார். (ற-இ)

# அமெரிக்கா அதிகாரியின் விஜயம் இப்போது நாட்டுக்கு அவசியமா?

## கேள்வி எழுப்புகிறது ஜேவிபி

கொழும்பு, ஒக்.26

இலங்கை கொரோனாவால் பாதிக்கப்பட்டுள்ள நிலையில் அமெரிக்காவின் மிக முக்கிய அதிகாரியொருவர் இலங்கைக்கு விஜயம் மேற்கொள்ள வேண்டிய அவசியம் என்னவென ஜேவிபியின் நாடாளுமன்ற உறுப்பினர் பிமல் ரத்நாயக்க கேள்வி எழுப்பியுள்ளார்.

இது தொடர்பில் பிமல் ரத்நாயக்க மேலும் தெரிவிக்கையில்,

அமெரிக்க இராஜாங்க செயலாளருடன் பேசவுள்ள விடயங்கள் குறித்த உண்மையை அரசாங்கம் மக்களுக்கு தெரியப்படுத்த வேண்டும். யுத்தம் மற்றும் ஏனைய அவசரமான விடயங்களின் போது மாத்திரமே அமெரிக்க இராஜாங்க செயலாளர் விஜயம் மேற்கொள்வது வழமை. மைக் பொம்பியோவின் இந்த விஜயத்தின்போது எம்.சி.சி உடன்படிக்கை குறித்து ஆராயப்படும் என நாம் கருதுகின்றோம். இலங்கையில் எம்.சி.சி உடன்படிக்கை குறித்த அலுவலகத்தை அமெரிக்கா தொடர்ந்தும் வைத்திருக்கின்றது இந்த நிலையில் இலங்கை அவசியமான கடினமான முடிவுகளை எடுக்க வேண்டும் என அமெரிக்கா தெரிவித்துள்ளது. எனவே இது தொடர்பில் இலங்கை உரிய பதிலை வழங்க வேண்டும் எனத் தெரிவித்துள்ளார்.





# முல்லையில் மழை வேண்டி வழிபாடு!

முல்லைத்தீவு, ஒக்.26

முல்லைத்தீவு மாவட்டத்தில் கால போக நெற்செய்கையை விவசாயிகள் மேற்கொண்டுள்ள நிலையில், மழை வேண்டி ஆலயங்களில் சிறப்பு வழிபாடுகளை நேற்று மேற்கொண்டனர்.

முத்தையன் கட்டு குளக்கரையில் அமைந்துள்ள முத்துவிநாயகர் ஆலயத்தில் விவசாயிகள் மழை வேண்டி மூலஸ்தான பிள்ளையாருக்கு 1008 இளநீரால் அபிஷேகம் செய்துள்ளனர்.

புழுதி விதைப்பு மூலம் நெல் விதைக்கப்பட்ட போதும் சரியான காலத்துக்கு ஏற்றவகையில் சரியான மழைவீழ்ச்சி இதுவரை பதிவாகாத காரணத்தால் விதைத்த நெல் பயிர் ஆகமுடியாத நிலையில் விவசாயிகள் இந்த வழிபாடுகளை மேற்கொண்டனர். (ற-19)

# காலி மீன்பிடி துறைமுகம் மீண்டும் இயக்கம்

கொழும்பு, ஒக்.26

சுகாதார வழிமுறைகளைப் பின்பற்றி, காலி துறைமுகத்தின் ஊடாக, இன்று முதல் மீனவர்கள் கடலுக்குச் செல்வதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது என்று காலி மீன்பிடி துறைமுக முகாமையாளர் நிரஞ்சன் திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

கொரோனாத் தொற்று காரணமாக, இந்த மாதம் 21 ஆம் திகதியிலிருந்து காலி மீன்பிடித் துறைமுகம் தற்காலிகமாக மூடப்பட்டிருந்த நிலையில் இன்று மீனவர்கள் தொழிலுக்குச் செல்ல அனுமதி வழங்கப்பட்டுள்ளது. (ற-இ)

# இந்தோ – பசுபிக் நோக்கத்தை ஊக்குவிப்பதற்காகவே பயணம்

## அமெ.இராஜாங்க செயலாளர் தெரிவிப்பு

கொழும்பு, ஒக்.26



அமெரிக்காவின் சகாக்களுடன் சுதந்திரமான வெளிப்படையான இந்தோ பசுபிக் குறித்த பகிரப்பட்ட நோக்கத்தை ஊக்குவிப்பதற்காகவே ஆசியாவிற்கான தனது சுற் றுப்பயணம் இடம் பெறுகின்றது என அமெரிக்க இராஜாங்க செயலாளர் மைக்பொம்பியோ குறிப்பிட்டுள்ளார்.

இந்தியா, இலங்கை, மாலைதீவு மற்றும் இந்தோனேசியா ஆகிய நாடுகளுக்கான தனது சுற்றுப்பயணத்தை ஆரம்பித்துள்ள மைக்பொம்பியோ தான் விமானத்தில் ஏறும் படங்களை டுவிட்டரில் பகிர்ந்து, இந்த நாடுகளுக்கான "எனது விமானப்பயணம் ஆரம்பமாகிவிட்டது" எனத் தெரிவித்துள்ளார்.

"அமெரிக்காவின் சகாக்களுடன், சுதந்திரமான வலுவான செழிப்பான நாடுகளைக் கொண்ட, சுதந்திரமான வெளிப்படையான இந்தோ பசுபிக் குறித்து பகிரப்பட்ட நோக்கத்தை ஊக்குவிப்பதற்கு கிடைத்த வாய்ப்புக்கு நன்றி" எனவும் மைக்பொம்பியோ தனது டுவிட்டர் பதிவில் குறிப்பிட்டுள்ளார். (ந-இ)

# மழை வேண்டி விசேட இளநீர் அபிசேகம்

கிளிநொச்சி, ஒக்.26

கிளிநொச்சி மாவட்ட விவசாயிகள் மழை வேண்டி இரணைமடு கனகாம்பிகை அம்பாளுக்கு இரு நூறுக்கும் மேற்பட்ட இளநீர் கொண்டு இன்று விசேட அபிசேகம் செய்துள்ளனர்.

இந்த வருடம் காலபோக நெற் செய்கையை ஆரம்பித்து ஒரு மாதம் கடந்துள்ள போதும், பருவமழை இன்மையால் அவர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ள நிலையில், இந்த விசேட இளநீர் அபிசேகம் மேற்கொள்ளப்பட்டது.

கிளிநொச்சி மாவட்டத்தில் இந்த முறை சுமார் 72,000 ஏக்கர் வரை விவசாயிகள் நெற் செய்கையை மேற்கொண்டுள்ளனர். அதிகளவு விவசாயிகள் மழையை நம்பியே காலபோகத்தை மேற்கொள்கின்றனர். மழையின்மையால் மாவட்டத்தின் பெருமளவு விவசாயிகள் பாதிக்கப்பட்டுள்ளனர். எனவே இன்றைய தினம் இரணைமடு கமக்காரர் அமைப்புக்களின் சம்மேளனத்தின் ஏற்பாட்டில், கிளிநொச்சி இரணைமடு கனகாம்பிகை அம்பாளுக்கு இருநூறுக்கும் மேற்பட்ட இளநீர் கொண்டு விசேட அபிசேகம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. (ற-214,113)





# அம்பாந்தோட்டை துறைமுகத்தில் இருவருக்கு கொரோனாத் தொற்று

அம்பாந்தோட்டை, ஒக்.26

அம்பாந்தோட்டை மீன்பிடி துறைமுகத்தில் பணிபுரிந்த இருவருக்கு கொரோனாத் தொற்று உறுதிசெய்யப்பட்டுள்ளது. அங்கு கடந்த 23 ஆம் திகதி 57 மீனவர்கள் உட்பட 60 பேருக்கு பி.சி.ஆர்.பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது.

குறித்த பி.சி.ஆர்.பரிசோதனை முடிவுகள், நேற்று வெளியாகியுள்ள நிலையில் இருவருக்கு கொரோனாத் தொற்று உறுதியாகியுள்ளது. இவ்வாறு அடையாளம் காணப்பட்டவர்களில் ஒருவர், கடந்த 21ஆம் திகதி, பேலியகொட மீன் சந்தைக்குச் சென்றமையால் சுய தனிமைப்படுத்தலில் இருந்துள்ளார். ஆனால் மற்றொருவர், பி.சி.ஆர்.பரிசோதனையின் முடிவுகள் கிடைக்கும் வரை சமூகத்தில் உலாவியமை கண்டறியப்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்படுகின்றது. (வ-இ)

# ஆயுர்வேத வைத்தியருக்கு கொரோனா: 58 பொலிஸார் தனிமைப்படுத்தலில்

கொழும்பு, ஒக்.26

ஆயுர்வேத மருத்துவருக்கு கொரோனாத் தொற்று உறுதிப்பட்டுள்ளதைத் தொடர்ந்து கொஸ்கொட பொலிஸ் நிலையத்தின் பொலிஸ் அத்தியட்சகர் உட்பட 58 பொலிஸ் அதிகாரிகள் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர் என கொஸ்கொட பொலிஸ் செய்தித் தொடர்பாளர் தெரிவித்தார். கொரோனா வைரஸால் பாதிக்கப்பட்டுள்ளார் என உறுதிப்படுத்திய ஆயுர்வேத மருத்துவரிடம் சிகிச்சை பெற்ற பின்னர் சேவையில் இணைக்கப்பட்ட இரண்டு பொலிஸ் அதிகாரிகளாலேயே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. மருத்துவரும் அவரது மனைவியும் பி.சி.ஆர் பரிசோதனைகளுக்குப் பிறகு வீட்டிலேயே தனிமைப்படுத்தப்பட்டிருந்தனர். நேற்று பெறப்பட்ட பி.சி.ஆர் சோதனை அறிக்கையின்படி, அவர்கள் இருவரும் கொரோனா வைரஸால் பாதிக்கப்பட்டுள்ளனர் என்பது உறுதிப்படுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ந-இ)

# 38 ஆண்டுகளாக 'கொரோனா'வுடன் வாழ்பவர்



'கொரோனா' என்ற பெயரை கேட்டால் அனைவருக்கும் கோபமும் வெறுப்பும் தான் வரும். இந்த நிலையில், கொரோனாவுடன் 38 ஆண்டுகள் வாழ்ந்து வருகிறார் பிரிட்டனைச் சேர்ந்த ஒருவர்.

ஆம் அவரது பெயர் ஜிம்மி கொரோனா. அவருக்கு வயது 38.

கொரோனா பாதிப்புக்கு முன் எல்லோரையும் போல இவர் இயல்பான வாழ்க்கையை வாழ்ந்து வந்தார். இப்போது அவரது பெயரை கேட்டாலே அனைவரும் வித்தியாசமாக பார்க்கின்றனர்.

இதனால், ஜிம்மி கொரோனா போகும் இடமெல்லாம் தனது அடையாள அட்டையை எடுத்துச் செல்கிறார். ஜிம்மிக்கு அண்மையில் குழந்தை பிறந்த போதும் மருத்துவமனையில் அடையாள அட்டையை காட்ட வேண்டியிருந்தது.

அவர் விளையாட்டுக்காக தனது பெயரை கொரோனா என கூறுவதாக பலரும் சந்தேகித்து பின்னர் அடையாள அட்டையை பார்த்த பிறகே திருப்தியடைகின்றனர்.

இது தொடர்பில் ஜிம்மி கொரோனா தெரிவிக்கையில், எனது பெயர் கொரோனா என்று யாருமே நம்புவதில்லை. பல ஆண்டுகளாக என்னுடன் பழகியவர்களைத் தவிர எனது பெயர் கொரோனா என்று யாரும் நம்புவதில்லை.

எல்லா இடங்களிலும் என் பெயரை சொல்லி மக்கள் பேசும்போது விசித்திரமாக இருக்கிறது. கொரோனா என்பது எனது உண்மையான பெயர்தான் என நிரூபிக்க நான் படாத பாடுபடுகிறேன்- என்றார். (வ-இ)

# இருளுக்குள் மறைக்கப்பட்ட மெல்லிய மலர்!





ஒரு புகைப்படம் ஆயிரம் வார்த்தைகளுக்கு சமம் என்பார்கள். ஆம்! புகைப்படங்கள் பெரும் நினைவுகளை தன்னுள் தாங்கிக் கொண்டிருக்கும் உணர்ச்சிப் பெட்டகம் எனலாம். ஆனால், அதனுள் மகிழ்ச்சி மட்டுமே இருப்பதில்லை. இன்பம், துன்பம், அழுகை, பகையுணர்வு, படுகொலை, வன்மம் என பலவகையிலான உணர்வுகள், குணங்கள், பலமுகங்களின், அகங்களின் வெளிப்பாடு எனப் பல புதைந்திருக்கிறது. இது, எலும்பும் தோலுமாக பார்க்கவே விகாரமாக இருக்கும் ஒரு பெண்ணின் உருவம் என்பதை மட்டுமே உங்களால் யூகிக்கமுடிகிறது. படத்தின் பின்னணியில் உள்ள சோகத்தை சில ஆண்டுகள் பின்னோக்கிப் பார்த்தால் மட்டுமே அறியமுடியும்.

பிளான்ச் மோன்னியர் - இதுதான் இவர் பெயர்.

பிரான்ஸ் நாட்டின் போய்ட்டியர் நகரில் 1849 மார்ச் முதலாம் திகதி பிறந்தார். பார்ப்பதற்கு அசல் தேவதையாய் இருப்பாள். அவ்வளவு அழகு! நவீனமான ஆடைகளை தேடி தெரிந்து அணிவதில் நிகரற்றவள்.

ஆடம்பர போர்வையிலும் முதலாளித்துவ அந்தஸ்திலும் உள்ள ஒரு குடும்பத்து இளவரசி. 1874ஆம் ஆண்டு அவளுக்கு 25 வயதானது. திருமணம் செய்ய ஏற்ற வயது. சற்றே வயோதிபரான வழக்கறிஞர் ஒருவரை ப்ளான்ச் காதலித்தாள். அவரும் நேசிக்க ஆரம்பித்தார். இருவரும் திருமணம் செய்துகொள்ளலாம் என முடிவெடுத்தனர்.

ஆனால், வீட்டில் அவளது அம்மா லூயிஸ் மகளின் விருப்பத்துக்கு எதிராக நின்றார். தனக்கு பிடிக்காத, தன் குடும்பத்துக்கு பொருத்தமில்லாதவர் என மகளை கண்டித்தார். எனினும், பிளான்ச் தன் முடிவில் உறுதியாக இருந்தாள். அவளை தன் வழிக்கு கொண்டுவர முடியாத லூயிஸ் தனக்குள் எழுந்த பணக்காரத்தனத்தாலும் கோபத்தாலும் பிளான்ச்சை வீட்டின் இருண்ட அறையொன்றில் வைத்து பூட்டினார்.

வெயிலோ வெளிச்சமோ இல்லாத அந்த அறையில் கட்டிலே கதியென இருந்தாள் பிளான்ச். சாப்பாடு, நீர் அறைக்குள் அனுப்பப்பட்டது. என்றாலும், அவற்றை உண்பதில் அவள் விரும்பவில்லை. எந்நேரமும் தன் காதலனின் நினைவு அவளை வாட்டியது.

இந்நிலையில் பிளான்ச் விரும்பிய வழக்கறிஞர் 1885ஆம் ஆண்டு எதிர்பாராதவிதமாக இறந்துவிட்டார். அவர் இறந்த செய்திகூட பிளான்சுக்கு தெரியாது. அந்த இருட்டு அறைக்குள்ளேயே 25 வருடங்களை கடத்திவிட்டாள்.

1901 மே 23 அன்று போய்ட்டியர் காவல் நிலையத்துக்கு, இளம்பெண் ஒருவர் வீட்டுக்குள் சிறைபிடிக்கப்பட்டிருப்பதாக பெயர் குறிப்பிடப்படாத கடிதமொன்று வந்திருந்தது.

கடிதத்தை மூலமாக வைத்துபொலிஸார் விசாரிக்க ஆரம்பித்தனர்.

கடிதத்தில் குறிப்பிட்டிருந்த வீட்டை கண்டுபிடித்தனர். அவர்கள் வீட்டு வாசலுக்கு சென்றனர். சுற்றிலும் முற்றிலும் பார்த்தனர். எந்த சத்தமும் இல்லை. கதவை தட்டினர். பதில் இல்லை.

உள்ளே ஏதோ அசையும் சத்தம் கேட்டது. திரைச்சீலைகள் அசைந்தன. யாரோ எட்டிப் பார்த்தது போல் தெரிந்தது.

பொலிஸார் உள்ளே நுழைந்தனர். யாரேனும் அறைக்குள் அடைத்து வைக்கப்பட்டுள்ளாரா என ஒவ்வோர் அறையாக தேடினர்.

அவர்கள் அந்த அறையின் கதவை திறந்தனர். அப்போது எலும்புக்கூடு போன்ற உருவமொன்றை பார்த்தனர். அவர் பிளான்ச்தான்.

அப்போது அவளுக்கு 50 வயது. 25 ஆண்டுகளாக வெயிலோ வெளிச்சமோ படாமல், உடம்பில் சொட்டு தண்ணீர் படாமல் (குளிக்காமல்), உணவு, தண்ணீர் என எதையும் சரிவர உட்கொள்ளாமல், மிகவும் மெலிந்து கிடந்தாள்.

முழு நிர்வாணமாக இருந்தவள் தன் உடம்பையும் முகத்தையும் கட்டில் போர்வைக்குள் மறைத்துக்கொண்டாள். அவளுடைய மொத்த எடையே 25 கிலோகிராமாகத்தான் இருந்தது. அறையெங்கும் தூசி படிந்திருந்தன. அவள் படுத்திருந்த மெத்தை அழுகிய வைக்கோலினால் ஆனதாக இருந்தது. தான் கழித்த மலத்தின் மீதே படுத்து பிரண்டுபோயிருந்தாள். உணவுகள் சிந்திக்கிடந்தன. உணவு கழிவுகளும் ஆங்காங்கே கொட்டிக்கிடந்தன. அறை முழுதும் சகிக்கமுடியாத துர்நாற்றம்.

அந்த கொடுமையான சூழலிலிருந்து பொலிஸார் பிளான்ச்சை மீட்டு, ஹோட்டல் டியு மருத்துவமனைக்கு கொண்டு சென்றனர். பிளான்ச்சை பரிசோதித்துப் பார்த்த மருத்துவர்கள், அவள் இறக்கும் தருவாயில் இருப்பதாக தெரிவித்தனர்.

25 ஆண்டுகளுக்கு பின் அவள் குளித்தாள். தாதியர் அவளை நீராட்டினர். அவர்களின் பணிவிடைகளுக்கு பிளான்ச் அமைதியாக ஒத்துழைப்பு கொடுத்தாள். பொலிஸாருக்கும் மருத்துவர்களுக்கும் தாதியர்களுக்கும் மனதார நன்றி கூறினாள். அதேநேரம் அவள் மனநிலை பாதிக்கப்பட்டவளாகவும் இருந்தாள். இது, இவள் தானாக உருவாக்கிக்கொண்ட நிலையல்ல. இதற்குப் பின்னால் குடும்பத்தவர்கள் இருந்திருக்க வேண்டும் என சந்தேகித்தனர்.

பிளான்ச் மோன்னியரின் நிலைக்கு காரணமான அவளது அம்மாவையும் சகோதரரையும் பொலிஸார் கைது செய்தனர். இருவருமே குற்றவாளிகள் என தீர்ப்பு வழங்கப்பட்டு சிறைக்கு அனுப்பப்பட்டனர். சிறை சென்ற 15 நாட்களிலேயே மூப்பு காரணமாக பிளான்ச்சின் தாயார் மரணமடைந்தார். சகோதரர் ஒரு வருடம் சிறை தண்டனை அனுபவித்துவிட்டு, குற்றத்துக்கு தனக்கும் எந்த சம்பந்தமுமில்லை என எப்படியோ முறையிட்டு சட்டத்தின் பிடியிலிருந்து தப்பித்துக்கொண்டார். காரணம், அவர் ஒரு வழக்கறிஞர். சட்டத்தை கையாளும் நுட்பம் தெரிந்தவர்.

பிளான்ச் மருத்துவமனையில் துளித்துளியாக உடல் எடை தேறி வந்தாள். எனினும், மிகுந்த மன உளைச்சல் கொண்டிருந்தாள்.

உயிரோடிருந்து உறவென்று சொல்ல தாயில்லை. சகோதரன் இருந்தும் பயனில்லை. ஆதரிக்க யாருமில்லை.
வாழ்க்கை முழுதும் கைகோர்த்து நடக்க காதலனும் இல்லை....

மனவெளிகள் நசுக்கப்பட்டு மரணத்தை தொட்டாள் பிளான்ச் மோன்னியர்... 1913இல்! இங்கே அவளின் இருவிதமான புகைப்படங்களை பாருங்கள்... இரண்டும் எத்தனை வித்தியாசங்கள்!

# சச்சின், லாரா அலாதி

## மனம் திறக்கிறார் ஷேன் வோர்ன்





மெல்பேர்ன், ஒக்.26

எனது சமகால வீரர்களான சச்சின் மற்றும் பிரையன் லாரா ஆகியோர் மிகச் சிறந்த துடுப்பாட்டவீரர்கள். எனது காலத்தில் மட்டுமல்ல அனைத்து காலத்திலும் இந்த இருவரும் மிகச் சிறந்தவர்கள் என்று கூறலாம். இவர்கள் தான் எனது பந்துவீச்சை மைதானத்தின் அனைத்து திசைகளிலும் அடித்துப் பழக்கப்பட்டவர்கள் என்று ஆஸ்திரேலிய அணியின் முன்னாள் சுழற்பந்து வீச்சாளர் ஷேன் வோர்ன் தெரிவித்துள்ளார்.

ஷேன் வோர்ன் அவரது அசாத்தியமான சுழற்பந்து வீச்சின் காரணமாக பல நூறு இலக்குகளை வீழ்த்தியவர். டெஸ்ட் கிரிக்கெட் போட்டிகளில் முத்தையா முரளிதரனுக்கு அடுத்தபடியாக அதிக இலக்குகள் வீழ்த்தியவர் இவர்தான். முத்தையா முரளிதரன் டெஸ்ட் கிரிக்கெட் போட்டிகளில் 800 இலக்குகள் வீழ்த்தி இருக்கிறார்.

1992 ஆம் ஆண்டு முதல் விளையாடிய இவர் 2007 ஆம் ஆண்டு வரை அனைத்து விளையாட்டு வீரர்களையும் தனது சுழற்பந்து வீச்சால் மிரள வைத்துள்ளார். இந்த நிலையில் கிரிக்கெட் வரலாற்றில் மிகச் சிறந்த சுழற்பந்து வீச்சாளர்களில் ஒருவரான இவரது பந்து வீச்சை இந்த இரண்டு துடுப்பாட்ட வீரர்களும் எளிதாக விளையாடியுள்ளனர் என்று குறிப்பிட்டுள்ளார். ஆனாலும் எனக்கு இவர்களுக்கு எதிராக பந்து வீசுவது தான் மிகவும் பிடிக்கும். சில நேரங்களில் அவர்கள் எனது பந்துவீச்சை அடித்து நொறுக்கினாலும் சில நேரங்களில் நான் அவர்களது இலக்கையும் வீழ்த்தியிருக்கிறேன்.

அந்தவகையில் சச்சின் மற்றும் பிரையன் லாரா ஆகியோர் எனது பந்து வீச்சை ஆடுவதைப் பார்க்க நன்றாக இருந்தது என்று ஷேன் வோர்ன் தெரிவித்துள்ளார். (ற)



# அரையிறுதிக்குள் போபண்ணா ஜோடி

புதுடில்லி, ஒக்.25

ஐரோப்பிய பகிரங்க ரென்னிஸ் இரட்டையர் பிரிவு அரையிறுதிக்கு இந்தியாவின் போபண்ணா, நெதர்லாந்தின் மிட்டெல்கூப் ஜோடி முன்னேறியது.

ஐரோப்பிய பகிரங்க ரென்னிஸ் தொடர் பெல்ஜியத்தில் நடைபெற்று வருகின்றது. இதன் இரட்டையர் பிரிவு காலிறுதியில் இந்தியாவின் ரோகன் போபண்ணா, நெதர்லாந்தின் மேட்வே மிட்டெல்கூப் ஜோடி, ஆஸ்திரேலியாவின் அலெக்ஸ் டி மினார், மாட் ரெய்ட் ஜோடியை எதிர்கொண்டது. முதல் செற்றை 6;3 என்ற கணக்கில் கைப்பற்றிய போபண்ணா ஜோடி, 2 ஆவது செற்றை 4;6 என்ற கணக்கில் இழந்தது.

வெற்றியாளரை நிர்ணயிக்கும் சூப்பர் டை பிரேக்கரில் எழுச்சி கண்ட இந்தியா, நெதர்லாந்து ஜோடி 10;4 என்ற கணக்கில் வென்றது. முடிவில் போபண்ணா ஜோடி 6;3, 4;6, 10;4 என்ற கணக்கில் வெற்றி பெற்று அரையிறுதிக்குள் நுழைந்தது. (ற-இ)




# உலக டெஸ்ட் இறுதிப் போட்டி அடுத்த ஆண்டு ஜூன் மாதம்

புதுடில்லி, ஒக்.26

சர்வதேச கிரிக்கெட் நிறுவனம் (ஐ.சி.சி) உலக டெஸ்ட் சம்பியன்ஷிப்பின் இறுதிப் போட்டியை அடுத்த ஆண்டு ஜூன் மாதம் நடத்துவதற்கு பரிசீலித்து வருகிறது. இந்தப் போட்டி, 2019 ஆம் ஆண்டு முதல் நடைபெற்று வருகிறது. இலங்கை உட்பட 9 நாடுகள் இந்தத் தொடரில் பங்கெடுத்து வருகின்றன.

இந்த தொடரின் இறுதியில் முதல் இரண்டு இடங்களைப் பிடிக்கும் அணிகள் இறுதிப் போட்டியில் மோதும். தற்போது கொரோனா அச்சம் காரணமாக பல டெஸ்ட் தொடர்கள் ஒத்தி வைக்கப்பட்டதால், திட்டமிட்டபடி இறுதிப் போட்டியை நடத்துவதில் சிக்கல் எழுந்துள்ளது.

இந்த நிலையிலேயே இறுதிப் போட்டியை அடுத்த வருடம் ஜூன் மாதம் நடத்த ஐ.சி.சி. பரிசீலித்து வருகிறது. கொரோனாவால் இரத்து செய்யப்பட்ட போட்டிகளுக்கு ஒவ்வொரு அணிக்கும் சம புள்ளிகள் வழங்க முன்மொழியப்பட்டது.

கடந்த மார்ச் மாத நிலைவரப்படி அணிகள் பெற்ற புள்ளிகள், மற்றும் அடுத்த ஆட்டங்களின் மூலம் அணிகள் பெறப் போகும் புள்ளிகள் அடிப்படையில் முதலிரு இடங்களைப் பிடித்த அணிகள் இறுதிப் போட்டிக்குள் நுழையும். (ற)

# வெளியாகியது 'சூரரைப் போற்று' பட 'டிரைலர்'

சுதா கொங்கரா இயக்கத்தில் சூர்யா நடிக்கும் 'சூரரைப் போற்று' படத்தின் டிரைலர் இன்று வெளியாகியுள்ளது.

இந்தப் படத்தில் அபர்ணா பாலமுரளி, மோகன் பாபு மற்றும் பலர் நடித்துள்ளனர். 'ஏர் டெக்கான்' என்ற பயணிகள் விமான நிறுவனத்தை ஆரம்பித்த ஜி.ஆர். கோபிநாத் வாழ்க்கை வரலாற்றுப் படம் இது.

கிராமத்து இளைஞன் ஒருவன் ராணுவத்தில் இணைந்து பின்னர் ஏழை மக்களும் விமானத்தில் பறக்க வேண்டும் என்ற கனவுடன் விமான நிறுவனம் ஒன்றை ஆரம்பிக்க நினைக்கிறான். அதற்காக அவன் சந்திக்கும் பிரச்சினைகளும், போராட்டங்களும்தான் படத்தின் கதை. எதிர்வரும் நவம்பர் 12ஆம் திகதியன்று ஓடிடி தளத்தில் வெளியாக உள்ள இப்படத்தின் டிரைலர் முழுவதும் எமோஷனல் மயமாகவே உள்ளது. அதிகார பலம், பணபலம் உள்ளவர்களை எதிர்க்கும் வசனங்கள் அதிகம் இருக்க வாய்ப்புள்ளது.

நெடுமாறன் ராஜாங்கம் கதாபாத்திரத்தில் சூர்யாவின் நடிப்பு துடிப்பாக இருக்கும் என்பதை டிரைலரைப் பார்க்கும் போதே புரிகிறது. நமது வீட்டுப் பெண் போலவே இருக்கிறார் அபர்ணா பாலமுரளி.

மற்ற கதாபாத்திரங்களில் மோகன் பாபுவுக்கு அதிக முக்கியத்துவம் இருக்கும் என்று தெரிகிறது. தமிழில் சிறந்த வாழ்க்கை வரலாற்றுப் படங்களை அதிகம் பார்த்ததில்லை. அந்தக் குறையை இந்தப் படம் போக்கும் என எதிர்பார்க்கலாமா ?.




இப்பத்திரிகை, யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அருண் பிறிண்டேர்ஸால் 26.10.2020 ஆம் திகதி வெளியிடப்பெற்றது.